**Bildungsdirektion Kanton Zürich**
Volksschulamt

**Tamil**

## Merkblatt Zecken

### ஒட்டுண்ணி குத்துதல்: அதன் ஆபத்தும் பாதுகாப்பு நடவடிக்கையும்

பாடசாலை மருத்தவ திணைக்களத்தின் அறவிப்பு

அன்பான பெற்றோர்களே

ஒவ்வோரு குளிர்காலம் முடிந்த பின்னர் பிள்ளைகள் இவர்களது பொழுதுபோக்கு வேலையிலும் பாடசாலையுடனும் அல்லது பாலர் பாடசாலையுடன் வெளியில் சென்று இயற்கையை பார்க்க சந்தோசப்படுவார்கள். இவ்வேளையில் ஒட்டுண்ணிகளினால் உங்கள் பிள்ளைகள் குத்தப்படலாம். அனைத்து சுவிஸிலும் அண்மை நாடுகளிலும் சுமார் **1500** மிற்றர் கடல் மட்ட உயரத்திலிருந்து அனைத்து குலைகள்**/** சருகுகள் கொண்ட காடுகளில் ஒட்டுண்ணி உயிர்வாழுகின்றன. ஓட்டுண்ணிகள் மரப்பத்தைகளுக்குள்ளும் நிலத்திலிருந்து **1.5** மீற்றர் உயரம் வரை வாழுகின்றன. இதனூடாக ஊடுறுவி போகையில் தொத்திக் கொள்ளுகின்றன. ஒட்டுண்ணி காலமானது இலைத்துளிர் காலத்திலிருந்து (மாசி மாதம்) இலையுதிர் காலம் (ஐப்பசி கார்த்திகை மாதம்) வரையாகும். ஓட்டுண்ணிகள் இரண்டு ஆபத்தான வருத்துங்களை விளைவிக்கலாம். இது ஏற்படுவதற்கு சாத்தியம் குறைவாக இருந்தாலும், கீழ் கருதப்படும் நோய் ஏற்படுவதற்கு வாய்புண்டு. இங்கு நீங்கள் இதையிட்டிய முக்கிய விபரங்களாகிய ஆபத்தையிட்டியும் அதனை தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அறியலாம்.

**ஒட்டுண்ணியினால் பரவப்படும் நோய்கள்**

லிமே–பொறலியோச(**Lyme – Borreliose) :** ஒட்டுண்ணிகள் அனைத்து சுவிஸ் நகர பகுதிகளிலும் பொறலியோச என்னும் நோயை பரப்பலாம். ஆனால் அப்படியிருந்தும் பத்தில் ஒரு ஒட்டுண்ணியால் குத்தப்பட்ட நபருக்கு இந்நோய் ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஏற்படுகின்றன. ஓட்டண்ணி குத்தி சிறிது நாட்களின் பின்னர் காய்ச்சல் , சலிக்காய்ச்சல் வருமாயின் அல்லது உண்ணி குத்திய இடத்தில் அல்லது உடலின் வேறு பகுதிகளில் வட்ட வடிவமாக சிவந்து இருக்குமாயின் உங்கள் வீட்டு அல்லது சிறுவர்–மருத்துவரிடம் அழைத்து செல்ல வேண்டும். இந்நோயை அன்றிபயோடடிக்கா மூலம் குணப்படுத்தலாம்.

ஒட்டுண்ணியினால் ஏற்படும் மூளையழர்ச்சி (**Zeckenenzephalitis )** இந்நோயை கோடைக்கால ஆரம்பத்தில் – மெனிங்கோ மூளையழர்ச்சி, FSME என்றும் அழைப்பர்.

சுவிஸ் நாட்டில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே இம்மூளையழர்ச்சி நோயை உருவாக்கும் நச்சுக்கிருமிகள் கொண்ட ஒட்டுண்ணிகள் வாழுகின்றன. (பின்பக்கத்தில் இக்கிருமிகள் FSME வாழும் இடங்களை குறிக்கப்பட்டுள்ளன). இவைகள் மனிதனுக்கு நோய்களை பரப்பலாம். அனைத்த சூறிச் மாநகரத்தில் இக்கிருமி பரவுவதற்கு வாய்ப்புண்டு. **1000** தொடக்கம் **4000** வரை குத்தப்பட்ட ஒட்டுண்ணியில் சுமார் ஒரு தடவை இவ்வாறு கருதப்பட்ட இடங்களில் இந்த ஆபத்தான மூளையழர்ச்சி (**Zeckenenzephalitis)** நோய் ஏற்படுகிறது. ஓட்டுண்ணி குத்தி சில நாட்களுக்கு பின்னர் தலைவலி, காய்ச்சல், களைப்பு ஏற்படுமாயின் உங்கள் வீட்டு அல்லது சிறுவர்–மருத்துவரிடம் அழைத்து செல்ல வேண்டும். இந்த ஒட்டுண்ணியால் ஏற்படும் மூளையழர்ச்சிக்கு எதிராக தடுப்பூசி போடலாம். (கீழே பார்க்கவும்)

### ஒட்டுண்ணியினால் ஏற்படும் மூளையழர்ச்சி (**Zeckenenzephalitis/** FSME**)**

Volksschulamt
Sonderpädagogik
Schulärztlicher Dienst

Walchestrasse 21, Postfach
8090 Zürich
www.volksschulamt.zh.ch

Dr. Ferdinanda Pini-Zueger, Leitung SAD des Kt.ZH
Telefon 043 259 22 97 / Fax 043 259 51 31
ferdinanda.pini-zueger@vsa.zh.ch

**முற்கூட்டியே எதிர் நடவடிக்கையும் பாதுகாப்பு நடவடிக்கையும்**

**நன்கு உடலை மறைத்த உடை(நீளமான காற்சட்டை, முழு கை கொண்ட சட்டை) பூச்சி ஸ்பிரே, முடிந்த வரை பத்தைகளையோ புற் பதர்களையோ, மரபட்டைகளின் பக்கத்தையோ தவிர்க்கவும். மரப்பட்டை பகுதிகளுக்கு சென்ற பின்னர் உடல் அனைத்தையும் ஒட்டுண்ணி உள்ளதா என தேடவேண்டும். பேற்றோர்கள் பிள்ளைகளின் தலையில் ஒட்டுண்ணி உள்ளதா என கவனிக்க வேண்டும். ஒட்டுண்ணி குத்தினால் நோவு ஏற்படாது. அதனால் அவதானிப்பது குறைவாக இருக்கும். உண்ணியை உடலில் கண்ட பின்பு இடுக்கிமுள்(பின்செற) மூலம் தோளுக்கு அடியில் ஆழமாக வைத்து உண்ணியை நேராக இழுத்தெடுக்க வேண்டும். ஆதன் பின்னர் அந்த இடத்தில் கிருமியை அழிக்கும் மருந்தை பூசவும். ஒட்டுண்ணிக்கு மேல் எண்ணெய் அல்லது பசை அல்லது வெசிலின் தடவக்கூடாது. குத்திய இடத்தையும் திகதியையும் பேனாவினால் குறித்து வைக்கவும்.**

**ஒட்டுண்ணியினால் ஏற்படும் மூளையழர்ச்சி** (Zeckenenzephalitis/ FSME) **நோய்கெதிரான தடுப்பூசி**
**FSME** என்னும் நோய் கடந்த பல வருடங்களாக அதிகரித்த வன்னமுள்ளன. இக்காரணத்தினால் வளர்ந்தோர்களையும் **6** வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களையும் **FSME** என்னும் கிறுமி அடங்கிய ஒட்டுண்ணி வாழும் இடத்தில் வசிப்பவர்களை அல்லது இப்பகுதிகளுக்கு கூடுதலாக செல்பவர்களை இந்த **FSME** நோய்கெதிராக தடுப்பூசி போட அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த அறிவுரை **2006** இலைதுளிர் கால பகுதியில் அனைத்து சூறிச் நகரத்திற்கும் செல்லுபடியாகும். இத்தடுப்பூசி **6** வயதிற்கு கீற்பட்ட சிறுவருக்கு பொதுவாக அறிவுரை செய்யப் படவியல்லை. முழுமையான தடுப்பூசியினால் ஏற்படும் பாதுகாப்பிற்கு **3** தடவை தடுப்பூசி போட வேண்டும். **2**வது தடுப்பூசி போட்ட பின்னர் குறைந்த பட்சம் **4** தொடக்கம் **6** கிழமைக்கு பின்னர் தான் முழுமையான தடுப்பு பாதுகாப்பு தொடங்குகிறது. இக்காரணத்தினால் **1**வது தடுப்பூசியை ஒட்டுண்ணி காலத்திற்கு முன்பு போடுவது சிறந்ததாகும். நீங்கள் தடுப்பூசிக்கு பொறுப்பானவர்களிடம் அல்லது வீட்டு மருத்துவரிடம் அல்லது சிறுவர்–மருத்துவரிடம் இதற்கான அறிவுரையை பெறலாம்.

**மேலதிக கேள்விகளுக்கும் தகவல்களுக்கும்**
உங்களது பாடசாலை மருத்துவரிடம் அறியலாம்.
மேலதிக தகவல்களுக்கு www.vsa.zh.ch -> Downloads -> Schularzt

**ஒட்டுண்ணியினால் ஏற்படும் மூளையழர்ச்சி** (Zeckenenzephalitis/ FSME) **காணப்படும் வட்டாரங்கள் (பங்குனி மாத நிலை** 2006**)**

| | |
|---|---|
| **Zürich** | அனைத்து மாகாணம |
| **Aargau** | Rheinfelden, Möhlin, Wallbach, Bezirk Laufenburg, Koblenz, Döttingen, Zurzach, Birr, Brugg, Würenlingen, Baden, Wettingen, Rothrist, Zofingen, Brittnau, Gon-tenschwil, Schöftland, Muhen, Gränichen |

Volksschulamt
Sonderpädagogik
Schulärztlicher Dienst

Walchestrasse 21, Postfach
8090 Zürich
www.volksschulamt.zh.ch

Dr. Ferdinanda Pini-Zueger, Leitung SAD des Kt.ZH
Telefon 043 259 22 97 / Fax 043 259 51 31
ferdinanda.pini-zueger@vsa.zh.ch

| | |
|---|---|
| **Bern** | Gampelen, Erlach, Grosses Moos, Lyss, Jens, Port, Mühleberg, Kriechenwil, Belp, Münsingen, Steffisburg, Thun, Spiez, Frutigen, Erlenbach, vorderes Simmental |
| **Fribourg** | Salvenach, Ulmiz, Kerzers |
| **Graubünden** | Fläsch, Luziensteig, Grüsch, Seewis . |
| **Luzern** | Reiden, Langnau, Dagmersellen, Nebikon, Egolzwil, Kottwil, Sursee, Knutwil |
| **Nidwalden** | Stans, Buochs, Bürgenstock, Stanserhorn |
| **Obwalden** | Kerns, Stanserhorn |
| **Schaffhausen** | Hallau, Osterfingen, Neuhausen, Beringen, Schaffhausen, Stein am Rhein . |
| **Solothurn** | Bellach, Lommiswil, Langendorf |
| **St. Gallen** | Jonschwil, Zuzwil, Niederhelfenschwil, Mörschwil, St. Magrethen, Balgach, Wagen, Jona, Mels, Sargans, Vilters |
| **Thurgau** | Diessenhofen, Basadingen, Ermatingen, Kreuzlingen, Warth, Weiningen, Herdern, Nussbaumen, Frauenfeld, Stefffurt, Weingarten, Thundorf, Lommis, Aadorf, Wängi, Affeltrangen, Oppikon, Friltschen, Weinfelden, Zihlschlacht, Kesswil |
| **Waadt** Cu | drefin, Salavaux |
| **Zug** | Steinhausen |
| **FL** | Balzers, Vaduz, Nendeln |

மேலதிக ஒட்டுண்ணி தகவல்களுக்கு கீழ்வரும் விபரங்களை கவனிக்கவும்.
http://www.bag.admin.ch/themen/medizin/00682/00684/01114/index.html?lang=de des Bundesamtes für Gesundheitswesen, www.zecke.ch oder www.zecken.ch

“Vorsicht bei Zeckenstich" – என்னும் தகவல் புத்தகத்தை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். SUVA என்னும் காரியாலயத்தில் லூர்சன் என்னும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். (மத்திய வாடிக்கையாளர் தொலைபேசி இல : **041 419 58 51** அல்லது www.suva.ch/waswo) மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளலாம்.

Zürich, 31.08.2006 fdi/tr

Volksschulamt
Sonderpädagogik
Schulärztlicher Dienst

Walchestrasse 21, Postfach
8090 Zürich
www.volksschulamt.zh.ch

Dr. Ferdinanda Pini-Zueger, Leitung SAD des Kt.ZH
Telefon 043 259 22 97 / Fax 043 259 51 31
ferdinanda.pini-zueger@vsa.zh.ch